அசல் வழக்கு எண். 2/2019

நாள் : 18.06.2025

வா.சா. : 1

பெயர் : ரமேஷ்

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

2 முதல் 5 ஐட்ட சொத்துக்கள் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், வேலப்பாடி கிராமத்தில் உள்ளன. 5ம் ஐட்ட சொத்து என் குடும்பத்திற்கு என் தகப்பனாரால் வாங்கப்பட்டதாகும். இது தவிர வேறு சொத்துக்களை வேலப்பாடி கிராமத்தில் என் தகப்பனார் வாங்கி பிறகு விற்றுள்ளார். எந்த வருடம் வாங்கினார் என்றால் 1985 ல் வாங்கி 1996ல் விற்றுவிட்டார். அந்த விற்பனை கிரய ஆவணங்களில் நானும் கையொப்பம் செய்துள்ளேன். அந்த கிரயத்தின் மூலம் எனக்கு எந்த தொகையும் கிடைக்கவில்லை. நான் சீர்காழியில் என்ன தொழில் செய்தேன் என்றால் தவணை தொழில் செய்தேன். என் தகப்பானரின் தேநீர் கடையிலும் நான் வேலை பார்த்தேன். அந்த தவணை கடைக்கு பெயர் எதுவும் கிடையாது. அதன் பெயர் சிலம்பு பைனான்ஸ் என்றால் அது சரியல்ல. தற்போது அந்த தவணை தொழில் நான் செய்து வருகிறேன். நான் தவணை தொழில் செய்தபோது நஷ்டம் ஏற்பட்டு அதனால் தான் வேலப்பாடி சொத்து விற்கப்பட்டது என்றால் அது சரியல்ல. என் அப்பா வேலப்பாடி சொத்தை விற்று எனக்கு ரூபாய் மூன்றரை லட்சம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சி என் சகோதரிக்கு அந்த தொகையில் சீர் செய்தார்கள் என்றார். வாசாஆ 4 ஆவணம் கூட்டுறவு சங்கத்தில் என் அம்மா பெயரில் வீடு கட்டுவதற்காக கடன் வாங்கப்பட்டது. என் அம்மா பெயரில் உள்ள சொத்து தான் தாவா முதல் ஐட்டமாகும். தற்போது அந்த சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என் தாயார் பெயரில் என் அப்பா வாங்கினார். அந்த கிரய சாசனத்தில் என் அப்பா பணம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் அப்பா கையெழுத்தும் அதில் இல்லை. அந்த கிரயத்திற்கான தொகை என் அப்பா டீக்கடையில் சம்பாதித்தது மற்றும் என்அம்மாவின் நகைகளை விற்று வாங்கியது என்றால் சரியல்ல. நான் சில காலம் பாண்டிச்சேரியில் டிரைவராக பணியாற்றினேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனக்கு பணம் தேவைப்பட்டதால் தான் வாசாஆ 4ன் படி கடன் வாங்கப்பட்டது என்றால்

சரியல்ல. 1ம் ஐட்ட சொத்து கிழமேல் ரோட்டில் சாலையின் தென்புறமாக உள்ளது. அதில் தற்போது இரண்டு வீடுகள் உள்ளன. அந்த இடத்தில் வாங்கும்போது ஒரு ஓட்டு வீடு இருந்தது. அந்த ஓட்டு வீடு பின்னால் என்னானது என்றால் நான் பின்புற பகுதியில் RCC roof போட்டு முன்பு பகுதியில் Sheet போட்டு வீடு கட்டினேன். முன்பகுதியில் ஒரு கட்டுமானம் உள்ளது. அந்த கட்டுமானம் ஆரம்பிக்கும்போது எல்லோரும் சேர்ந்து செய்தோம் பிறகு அவர்களே கட்டிக்கொண்டார்கள். என் சகோதரி அரசு பள்ளியில் ஆசிரியராக இருக்கிறார். அவர் கணவரும் ஆசிரியராக இருக்கிறார். அந்த சொத்தை பொறுத்து என் அம்மா என் சகோதரிக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார் சாட்சி முன்னால் உள்ள காலி இடத்தை மட்டும் செட்டில்மெண்ட் செய்து கொடுத்ததாக சொல்கிறார். அது வாசாஆ 6ன் படி 2010 ம் ஆண்டு நடந்தது. என் சகோதரி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தபிறகு தான் கடன் வாங்கினார். கடன் வாங்கி கட்டுமானத்தை முடித்துவிட்டார்கள். அந்த வீட்டின் வீட்டுவரி மற்றும் மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் என் சகோதரி பெயரில் தான் இருக்கிறது. அந்த கட்டுமானத்திற்கு சீர்காழி நகராட்சியில் என் சகோதரி பெயரில் அனுமதி பெறப்பட்டுள்ளது. நான் கட்டியதாக சொல்லும் பின்பகுதியும் என் அம்மாவும் சகோதரியும் சீர்காழி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் கடன் வாங்கி கட்டினார்கள் என்றால் அது சரியல்ல. அந்த கட்டுமானத்திற்கும் என் அம்மா என் சகோதரிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து தான் அந்த கட்டுமானம் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அவர் அவ்வாறு கட்டுமானம் கட்டியபிறகு அதை என் சகோதரி என் தாயார் பெயருக்கு 2021ல் செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். முதல் ஐட்ட சொத்தில் உள்ள வீட்டில் ஒரு பகுதி என் அம்மா பெயரிலும் மற்றொரு பகுதி என் சகோதரி பெயரிலும் உள்ளது என்றால் வழக்கிற்கு பிறகு அவர்கள் இவ்வாறு செய்து கொண்டதாக சாட்சி சொல்கிறார். இந்த செட்டில்மெண்ட் சம்பந்தமாக நான் அவர்களுக்கு எதாவது அறிவிப்பு கொடுத்தேனா, வழக்கு போட்டேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்கிறார். இந்த வழக்கு போட்டபிறகு வேலப்பாடி கிராமத்தில் உள்ள சில சொத்துக்களை பொறுத்து என் அப்பா என் சகோதரிக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் உள்ள அடிமனை பொறுத்து பாகம் கேட்கிறேனா அல்லது கட்டிடத்தின் மீதும் பாகம் கேட்கிறேனா

என்றால் சாட்சி இரண்டையும் சேர்ந்து நான்கில் ஒரு பாகம் கேட்கிறேன் என்கிறார். வழக்குரையில் அடிமனை மற்றும் மேற்கூரை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி சொல்லியுள்ளேன் என்றார். 1 மற்றும் 5 ம் ஐட்ட சொத்தை பொறுத்து நான் பாகம் கேட்க இயலாது என்றால் அது சரியல்ல. 2 முதல் 4 ஐட்ட சொத்து மூதாதையர் சொத்து என்பதால் அதில் எனக்குரிய பாகம் கிடைக்கும் என்றும் அதை பொறுத்து மட்டுமே நான் பாகம் கேட்க முடியும் என்றால் சரியல்ல. அனைத்து சொத்திலும் எனக்கு பாகம் உள்ளது.

மறு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/6/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை